கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி.கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. எஸ். இராசாராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—''மானியக் கோரிக்கை எண் 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 21,46,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய தினம் மானிய விவாதத்தின் போது மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது

*** ***

என்று ஒரு பகுதி வந்திருக்கிறது. அங்கே இருக்கிற சூழ்நிலைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அறிகிறேன். ஆகவே அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 10 ஆம் நாள் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

251. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையில் 1981 ஆம ஆண்டு பிப்ரவரி திங்கள் 9 ஆம் நாளிடப் பெற்ற 315 ஆம் எண் அரசாணையில் வெளியான

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண்கள் 1,41 மற்றும் 46—நில வருவாய் இயற்கைச் சீற்றத் துயர் தணிப்பு, இழப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடுகள்—ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

122. வருவாய்த் துறையின் 1981-82 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (ஆங்கிலம்).

123. மானியக் கோரிக்கை எண் 28-ன் பிழைதிருத்தம்.

இணைப்பு.

[59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.]

கொள்கை விளக்கக் குறிப்பு.

1. முன்னுரை.

மாநிலத்தின் வருவாய் நிர்வாகத்தில் நிலவரி விதிப்பு, நிலவரி வசூல், வேளாண்மை வருமான வரி, நகர்ப்புற நிலவரி, ஏனைய பல்வேறு வரிகள், அரசுக்குச் சேரவேண்டிய கடன்கள் ஆகியவை அடங்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், வருவாய் கோட்ட அளவில் கோட்டாட்சியரும், வட்ட அளவில் தாசில்தாரும், பிர்க்கா அளவில் வருவாய்த்துறை ஆய்வாளரும் இப்பணிக்குப் பொறுப்பேற்கின்றனர். வருவாய்க் கிராமங்கள் இந்த அமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றன. பல ஆண்டுகளாக, வருவாய் நிர்வாகம் முற்றிலும் வருவாய்ப் பணிகளையே மேற்கொண்டிருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இந்த வருவாய் அமைப்பு கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. தொன்று தொட்டு வருகின்ற இம்முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. சாதாரண காலங்களில் மட்டுமின்றி, புயல், வெள்ளம், தீ விபத்துக்கள் முதலிய இயற்கைச் சீற்றங்களின்போதும் இம்முறை செவ்வனே நடைபெற்றது. கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, பயிரிடுவதற்கு நில ஒப்படை செய்தல், வீட்டு மனைகள் வழங்குதல், பட்டா மாற்றம் செய்தல், பல்வேறு காரியங்களுக்காகச் சான்றிதழ்கள் வழங்குதல் முதலிய முக்கிய பணிகளை வருவாய்த் துறை கவனிக்கிறது. சென்ற நிதியாண்டில் பல்வேறு துறைகளில் எய்திய சாதனைகளும், நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ள விருக்கும் செயல் திட்டங்கள் குறித்த விவரமும் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.